பதிவு எண்: M. 6511 ★ தொலைபேசி: 51881 நிறுவியது: 1958 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 19 (3—8—68) சனி ★ வெளியூர்: ஆடி 20 (4—8—68) ஞாயிறு [இதழ்: 43

தூத்துக்குடி தனி வட்டமாகிறது

தூத்துக்குடி, ஆக. 3—

நெல்லை மாவட்டத்திலுள்ள திருவைகுண்டம் தாலுகா இரண்டாகப் பிரிக்கப்பட்டு, 'தூத்துக்குடி' என்ற பெயரில் ஒரு புதிய தாலுகா (வட்டம்) அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய தாலுகாவை நெல்லை கலெக்டர் இராசேந்திரன் துவக்கிவைத்தார்.

நெல்லை மாவட்டத்தில் இப்போது மொத்தம் 10 தாலுகாக்கள் உள்ளன.

கோவில்பட்டி தாலுகா ஒட்டப்பிடாரத்தில், ஒரு தனி துணைத் தாலுகா அலுவலகத்தையும் கலெக்டர் துவக்கிவைத்தார்.

தமிழக அரசின் கொள்கைகளுக்கு எதிராக விஷமம்!

இந்திப் பிரசார சபையைத் தூண்டிவிடுகிறது டெல்லி!

மத்திய அரசின் முழு உதவியுடன் இந்திப் பள்ளிகளாம்

புதுடில்லி, ஆக. 2—

இந்தியை அறவே ஒழித்து இரு மொழிக் கொள்கையை வகுத்துக் கொண்டு செயல்படும் தமிழக அரசுக்குப் போட்டியாக இந்திப் பள்ளிகளைத் தொடங்குமாறு இந்திப் பிரச்சார சபையைத் தூண்டிவிட்டிருக்கிறது — டில்லி அரசு!

ஏற்கனவே டில்லி அரசின் மானிய உதவி பெற்று நடந்துவரும் இந்திப் பிரசார சபை, இப்போது இந்திப் பள்ளிகளைத் துவக்குவதற்கென்று வேறு, மத்திய நிதியுதவியைப் பெறப்போகிறது!

'இந்தியே வேண்டாம்' என்று தீர்ப்பளித்துவிட்ட தமிழ் மக்களின் வரிப் பணமும் அவர்களின் விருப்பத்துக்கு மாறாக, இப்படி இந்தியின் பேரால் விரயமாக்கப்படவிருக்கிறது!

தமிழக அரசின் இருமொழிக் கொள்கை கண்டு எரிச்சலடைந்திருக்கும் டெல்லி, தனது எரிச்சலைத் தீர்த்துக்கொள்ளும் வகையிலேயே இத்தகைய விஷமச் செயலில் இறங்கியிருக்கிறதே தவிர உருப்படியான பலன் ஏற்படும் என்று கருதியல்ல! உதவாக்கரையான இந்தத் திட்டத்துக்கு, தமிழர்களின் வரிப் பணமும் கரைக்கப்படவிருப்பது, தமிழர்களுக்கு இந்தி ஆதிக்கம் விடுக்கும் அறைகூவல் என்றே கருதப்படுகிறது!

"தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் இந்தி மொழிப் பள்ளிகளைத் துவங்க விரிவான திட்டமொன்றை வகுக்குமாறு தட்சிண பாரத இந்திப் பிரச்சார சபை கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது"

என்று மக்களவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் துணைக் கல்வியமைச்சர் ஷேர் சிங் தெரிவித்தார்.

மத்தியக் கல்வித் துறையின்கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்தி ஆலோசனைக் குழு, இப்படி அமைக்கப்படும் இந்திப் பள்ளிகள் ஓராசிரியர் பள்ளியாக இருக்க வேண்டுமென்றும், தமிழக அரசிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட இந்தி ஆசிரியர்கள் இப்பள்ளிகளில் நியமிக்கப்படவேண்டுமென்றும் பரிந்துரை செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பள்ளிகளை நடத்தத் தேவைப்படும் முழுச் செலவையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அக்குழு தெரிவித்திருக்கிறதாம்.

"தட்சிண பாரத இந்திப் பிரச்சார சபையின் விரிவான அறிக்கை கிடைத்த பிறகு இது குறித்து மத்திய அரசு மேலும் ஆராயும்" என்றும் அவர் கூறினார்.

"தமிழக அரசு, தகுதி படைத்த எல்லா இந்தி ஆசிரியர்களுக்கும் மாற்று வேலை தர உத்தரவு பிறப்பித்திருக்கிறது. தகுதி பெற்றில்லாத இந்தி ஆசிரியர்களும், யாராவது விடு முறையில் சென்றால் அந்த நாட்களில் வேலை பார்க்கும் தற்காலிக இந்தி ஆசிரியர்களும் மட்டுமே அநேகமாக வேலை இழக்கக் கூடும்"

என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் பெரும்பாலோர் பெண்களேயாவர் என்றும், இவர்கள் எண்ணிக்கை 500-க்கு மேற்படாது என்றும் அவர் அறிவித்தார்.

திருச்சி, ஆக. 2—

அரியலூர் தாலுகா திருமழப்பாடி கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து ஒன்று காரணமாக 73 வீடுகள் எரிந்து போயின.

இதனால் ஏற்பட்ட சேதம் ரூ. 75,000 இருக்கும் என்று கூறப்படுகிறது.

மாவட்டக் கழகத் தேர்தல்

14--8--68: புதன்கிழமை

பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களால் ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி, (தி. மு. க.) மாவட்டக் கழகத் தேர்தல் 14--8--68 அன்று சென்னை மாவட்டம் தவிர எல்லா மாவட்டங்களிலும் முறைப்படி நடைபெறும்.

மாவட்டக் கழக அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகிய பொறுப்புக்களுக்குப் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் — அதற்குரிய கட்டணத் தொகையான பத்து ரூபாயுடன் — விண்ணப்பத் தாள்களை 5—8—68-ம் நாளிலிருந்து 8—8—68-ம் நாள் மாலை 7-மணிக்குள் தலைமைக் கழகத்திற்குச் சேரும் வகையில் அனுப்பிவைக்க வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

வேட்பாளரை முன்மொழிபவரும், வழிமொழிபவரும், சம்பந்தப்பட்ட மாவட்டக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருத்தல் வேண்டும்.

வேட்பாளர் விண்ணப்பத் தாள் தலைமைக் கழகத்திலும், மாவட்டக் கழகச் செயலாளர்கள் — வட்டக் கழகச் செயலாளர்கள் ஆகியோரிடத்திலும் கிடைக்கும்.

'அறிவகம்', சென்னை-13
31—7—68

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கட்சி மாறினால் பதவி பறிக்கப்படுமா?

அரசியல் சட்டத்தைத் திருத்தும் நோக்கம் இல்லையாம்

தில்லை வில்லாளன் கேள்விக்கு அமைச்சர் பதில்

புதுடில்லி, ஆக. 2—

"எந்தக் கட்சி டிக்கெட்டில் தேர்ந்தெடுக்கப்படுகிறாரோ அக்கட்சியிலிருந்து மாறுவதில்லை என ஒரு வேட்பாளர் தேர்தலுக்கு முன்பு வேட்பு மனுவிலும், தேர்தலுக்குப் பின்னரும் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவாரா?"

என்று நாடாளுமன்ற மேலவையில், கழக உறுப்பினர் திரு. தில்லை வில்லாளன் கேட்டபோது, சட்ட அமைச்சர் பி. கோவிந்த மேனன் தெரிவித்ததாவது:—

"தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் கட்சி மாறினால் அவரைத் திரும்ப அழைக்க வகைசெய்யும் பொருட்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தை அல்லது அரசியல் சட்டத்தைத் திருத்தும் நோக்கம் ஒன்றுமில்லை."

"கட்சி மாறுவதைத் தடுக்கும் பொருட்டு பல்வேறு யோசனைகளை, கட்சி மாறுதல் பற்றிய குழு பரிசீலனை செய்து வருகிறது"

என்று துணை சட்ட அமைச்சர் முகம்மது யூனிஸ் சலீம் தெரிவித்தார்.

"சனநாயக அமைப்புகளுக்கு உலை வைக்கும் கட்சி மாறுதலைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது?"

என்று பி. சோ. உறுப்பினர் பங்கா பெகாரி தாஸ் கேட்டார்.

"உங்கள் கட்சியிலிருந்துதான் (பி. சோ. கட்சி) அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் கட்சி மாறியுள்ளனர"

என்று தயாபாய் பட்டேல் (சுத) கூறினார்.

பங்கா பெகாரி தாஸ்:—"நாங்கள் பெரிதும் கவலையடைந்திருக்கிறோம்; நீங்கள் கவலைப் படாவிட்டால், இதே விளைவுகளை நீங்களும் எதிர்நோக்க வேண்டியிருக்கும்."

"கட்சி மாறுதல் பற்றிய குழு நியமித்த வழக்கறிஞர்கள் துணைக் குழு இரு சிபாரிசுகளை செய்துள்ளது; 'அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் அமைச்சரவைகளின் அளவைக் கட்டுப்படுத்தப்பட வேண்டும்' என்பது முதலாவது சிபாரிசு! 'அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பிரதிநிதி ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டபின் கட்சி மாறினால் அவர் உறுப்பினர் இடத்தை இழக்குமாறு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தைத் திருத்த

(4-ம் பக்கம் பார்க்க)

படியரிசித் திட்டம் விரிவாகிறது

உணவமைச்சர் கே.ஏ. மதியழகன் அறிவிப்பு

தஞ்சை, ஆக. 3—

"தமிழகத்தில் உணவு நிலைமை முன்னேற்றமடைந்திருப்பதால், சென்னை நகரை அடுத்துள்ள 47 இடங்களுக்குப் 'படி அரிசித் திட்டம்' விரிவுபடுத்தப்படும்"

என்று உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் இங்கு நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கின் பிற்பகல் கூட்டத்தில் பேசுகையில் அறிவித்தார்.

தஞ்சை மாவட்டத்தில் 36 இலட்சம் மக்களுக்குக் குடும்ப ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டு வருவதாகவும், அந்தக் கார்டுகள் வைத்திருப்பவர்களுக்குப் படி ஒன்றுக்கு ரூ. 1.17-க்கு அரிசி விற்பனை செய்யப்படும என்றும் அவர் கூறினார்.

நாட்டின் அரசியல் தரம் குறைந்துவருகிறது

காங்கிரசைக் காப்பாற்றுவதே ஆளுநர்கள் பணியாக உள்ளது

பீகாரில் குடியரசுத் தலைவர் ஆட்சி --- இரா. செழியன் கண்டனம்

பீகார் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் 'ஆட்சி வந்ததுபற்றி நாடாளுமன்றத்தில் 25—7 68-ல் நடைபெற்ற விவாதத்தில் தி.மு.க. உறுப்பினர் தோழர் இரா. செழியன் ஆற்றிய உரையாவது:—

இருண்ட நிழல் படிந்துவிட்டது!

"குடியரசுத் தலைவரின் ஆட்சியின்கீழ் மற்றுமொரு மாநிலம் கொண்டுவரப்பட்டுள்ளது

மேற்கு வங்காளம், அரியாணு, உத்தரப் பிரதேசம் — என்ற தொடர்ச்சியில், இப்பொழுது பீகார் மாநிலத்திலும் குடியரசுத் தலைவர் ஆட்சியின் இருண்ட நிழல் படிந்தவிட்டது. அமைச்சர்களாக இங்கே வீற்றிருப்பவர்களுக்குக்கூட அது விருப்பமாக இருக்கமுடியாது.

குடியரசுத் தலைவர் ஆட்சி ஒரு மாநிலத்துக்கு வருகிறதென்ருல், அந்த மாநிலத்தின் சனநாயக முறை முறிந்துவிட்டது என்று பொருள்.

அரசியல் சட்டத்தின்படி தனிப்பட்ட சனநாயக முறை கைவிடப்படும் நிலையில்தான் குடியரசுத் தலைவர் ஆட்சி வருகிறது! நாட்டின் அரசியல் தரம் குறைவதை அது காட்டுகிறது!

காங்கிரசுக்கு எது நல்லதோ அதுவே 'முறை'யாவதா?

மாநில ஆளுநர் தரும் ஆலோசனையை வைத்துக் குடியரசுத் தலைவர் ஆட்சியை மத்திய அரசு கொண்டுவருகிறது!

இதற்முன் மேற்கு வங்காளம், அரியாணு, உத்தரப் பிரதேசம் ஆகியவற்றில் ஆளுநர்கள் கையாண்ட முறைகள் நம் கவனத்துக்கு வருகின்றன. மாநிலத்துக்கு மாநிலம் அவர்கள் வகுத்துக்கொண்ட முறை மாறியுள்ளது.

எல்லாவற்றுச்கும் அடிப்படையாக இருந்த ஒரு முறை, காங்கிரசுக்கு எது நல்லதோ அதுதான் முறையாகிவிட்டது!

இராஜஸ்தானில் சட்டமன்றத்தை ஒத்திவைத்தார்கள்—காங்கிரசுக் கட்சி பலம் தேடும் வரை!

மேற்கு வங்காளத்தில் அமைச்சரவையை நீக்கினுர்கள்—அரியாணுவில், அமைச்சரவையுடன் சட்டமன்றத்தையும் கலைத்துவிட்டார்கள்!

ஆளுநர் முயற்சியில் நேர்மை உண்டா?

பீகாரில் சட்டமன்றத்தைக் கலைத்ததற்குக் காரணம் கூற வந்த காங்கிரசுக்காரர்கள், முதலமைச்சர் போலா பஸ்வான் சாஸ்திரி தமது இராஜினுமாவைக் கொடுத்தபோது, சட்டமன்றத்தைக் கலைத்து மறுதேர்தல் நடத்த ஆலோசனை கூறியிருந்தார்; 'முதலமைச்சர் தந்த அந்த ஆலோசனைப்படிதான் எல்லாம் நடைபெறுகிறது' என்று கூறுகிருர்கள்.

சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு, மறுதேர்தல் நடத்துமாறு கூட்டணியின் முதலமைச்சர் கூறியது உண்மையே; ஆனுல், அந்த ஆலோசனையை ஆளுநர் அப்படியே ஏற்றுச் செயல்படவில்லை.

கூட்டணியின் முதலமைச்சர் இராஜினுமா செய்ததும், 'அந்த இடத்தில் காங்கிரசுக் கட்சிக்காரர் வரமுடியுமா' என்று ஆராய்ந்திருக்கிருர் — ஆளுநர்; தமது அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"சட்டமன்றக் காங்கிரசுக் கட்சித் தலைவர் மகேஷ்பிரசாத் சின்கா என்னை இருமுறை சந்தித்தார்; 'நிலமான அமைச்சரவையை அமைக்க முடியுமா' என்று அவரை நான் கேட்டேன்; 'நான்கு நாட்கள் அவகாசம் தாருங்கள்' என்று அவர் கேட்டுக்கொண்டார்; 'அவ்வளவு காலம் தர முடியாது' என்று நான் மறுத்துவிட்டேன்."

கூட்டணிக் கட்சிகளின் முதலமைச்சர் தந்த ஆலோசனையை ஆளுநர் உடனே செயல்படுத்தவில்லை; 'நிலையான அமைச்சரவை அமைக்க முடியுமா' என்று முயன்றிருக்கிருர்; அவ்வாறு முயன்றதில் தவறில்லை. அந்த முயற்சி நேர்மையாசு இருந்திருக்கிறதா?

காங்கிரசுக் கட்சித் தலைவரைக் கூப்பிட்டு அமைச்சரவை அமைக்குமாறு ஆளுநர் கேட்டார்; அது பலன் தரவில்லை.

காங்கிரசுக் கட்சியைத்தவிர மற்றக் கட்சிகளை — குறிப்பாகக் கூட்டணியைப் பற்றி ஆளுநர் கவனித்தாரா—இல்லை!

காங்கிரசுக் கட்சியைக் கூப்பிட்டு அமைச்சரவை அமைக்கும் முயற்சியில் ஆளுநர் ஈடுபட்டதைப் பார்த்ததும் இராஜினுமா செய்த போலா பஸ்வான சாஸ்திரி, 'அமைச்சரவை அமைக்க என்னுல் இயலும்' என்று கூறியிருககிருர்.

முதலமைச்சர் இராஜினுமாச் செய்தாரே தவிர, கூட்டணியின் பெரும்பான்மை பலம் குறைந்துவிடவில்லை. அமைச்சரவை அமைப்பது என்ருல் அவர்களால் முடியும்; ஆனுல், இந்த வேண்டுகோளை ஆளுநர் கவனிக்க மறுத்துவிட்டார்.

இராஜினுமாச் செய்த முதலமைச்சர் கூறிய ஆலோசனையின்படி நடப்பது என்ருல், யாரையும் கூப்பிடாமல் சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு, மறு தேர்தலுக்கு வழி செய்திருக்க வேண்டும்; ஆளுநர் அப்படிச் செய்யவில்லை!

மனம்போன போக்கில் நடக்க அனுமதிப்பதா?

அமைச்சரவை அமைக்க வழி இருச்கிறதா என்று பார்த்தால், நடு நிலைமையாக, கூட்டணி—காங்கிரசு என்று இருவருக்கும் ஒத்தவித வாய்ப்பு அளிக்க வேண்டும்; காங்கிரசை மட்டும் ஆளுநர் தேர்ந்தெடுத்தார்; அவர்களால் முடியாது எனத் தெரிந்ததும், சட்டமன்றத்தைக் கலைக்க ஆளுநர் முற்பட்டார்!

இது, அரசியல் சட்டத்தில் பொதிந்துள்ள ஒரு குறைபாட்டைக் காட்டுகிறது.

அமைச்சரவையை அமைப்பதிலும் கலைப்பதிலும் ஆளுநரின் தனிப்பட்ட அதிகாரத்துக்கு எந்தவித வரைமுறையும் வரையறுக்கப்படவில்லை! மனம்போன போக்கில் அவர் நடந்துகொள்ளலாம் --- நடந்துகொள்கிருர்!

ஓர் அமைச்சரவைக்குப் பெரும்பான்மை பலம் இருக்கிறதா இல்லையா என்பதை முடிவு செய்வது சட்டமன்றத்தின் வேலையாக இல்லாமல், 'இராஜ பவன்'த்து வேலையாக ஆகிவிட்டது!

கடந்த ஓராண்டுக் காலத்தில் — ஆளுநர் நினைத்தமாத்திரத்தில்— இராஜஸ்தானில் சட்டமன்றம் ஒத்திவைக்கப்பட்டது; மேற்கு வங்காளத்தில் ஒரு அமைச்சரவை நீக்கப்பட்டு மற்ருெரு அமைச்சரவை கோண்டுவரப்பட்டது; அரியாணுவில் சட்டமன்றம் கலைக்கப்பட்டது!

ஆளுநர்கள் தமக்குத் தோன்றிய முடிவின்படி நடவடிக்கை எடுக்க முடிகிறது; அதைச் சட்டப்படி எதிர்க்க முடியாது. அரசியல் சட்டத்தில் அவ்வளவு அதிகாரம் ஆளுநர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது.

ஆக, ஆளுநர்களின் நியமனத்தில் அதிக முக்கியத்துவம் இருக்கிறது. நேர்மையான முறையில், நேர்மையாக இருக்கக் கூடியவர்களுக்கு—அதாவது கட்சிச் சார்பு அற்றவர்களுக்கு—ஆளுநர் வேலை தரப்படடால், ஓரளவு நியாயத்தை நாம் எதிர்பார்க்கலாம்.

ஆளுநர் பதவிகள் யாருக்குக் கிடைத்தன?

கடந்த இருபதாண்டுக் காலத்தில் ஆளுநர் பதவி எப்படிப்பட்டவர்களுக்குத் தரப்பட்டுள்ளது? தேர்தல்களில் தோல்வியடைந்த காங்கிரசுக்காரர்கள் கவர்னர்களாக நியமிக்கப்பட்டார்கள்—அதாவது, சட்டமன்றத்துக்குள் செல்ல முடியாமல் மக்களால் தடுக்கப்பட்டவர்கள் இராஜபவனத்துக்கு அனுப்பப்படடார்கள்........

திரு. வாஜ்பாய் (சனசங்கம்):— "அந்த ஆளுநாகள் சட்டமன்றத்துசகு வந்து துவக்க உரை நிகழ்த்துவார்."

இரா. செழியன்:—"ஆம்; தேர்தலில் வெற்றி பெற்றவர் சட்டமன்ற உறுப்பினராக உட்கார்ந்திருப்பார்; தோல்வி அடைந்த காங்கிரசுக்காரர் ஆளுநராக ஆகி, சட்டமன்றத்துக்குள் வந்து உரையாற்றுவார்!

வெற்றி பெற்ருல், சட்டமன்ற உறுப்பினர் பதவி -- அமைச்சர் பதவி -- இவ்வளவுதான்; தோல்வியடைந்தால், அதைவிட மேலான ஆளுநர் பதவிக்குத் தூக்கி விடப்படுவார்!

தோல்வியடைந்த காங்கிரசுக்காரர்கள் -- கட்சித் தலைமையில் துவண்டுபோன காங்கிரசுத் தலைவர்கள் ஆகியோர் ஆளுநர்களாக ஆக்கப்பட்டனர்!

பதவி ஏற்ற பின்னரும் கையாண்ட முறைஎன்ன?

ஆளுநர்களாகப் பதவி ஏற்ற பின்னரும், சிலர் கட்சி ஈடுபாட்டை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டனர்.

எடுத்துக்காட்டாக, 1966-ல் டெல்லியில் காங்கிரசு நாடாளுமன்றக் கட்சியின் தலைவர் போட்டி நடைபெற்றபொழுது, கேரள ஆளுநர் ஏ. பி. ஜெயின் இங்கே வந்தார்; கட்சிப் பிரிவில் கலந்துகொண்டு வெளிப்படையாக வேலை செய்தார். அதனைப் பத்திரிகைகளிடமும் ஒப்புக்கொண்டார்; பிறகு இராஜினுமாச் செய்தார்; ஆளுநராக இருந்தபொழுது கட்சி வேலையில் ஈடுபட்டார்!

ஆளுநர்களுச்கு அரசியல் சட்டத்தில் அதிகமான அதிகாரம் தரப்பட்டுள்ளது. இந்த நிலையில், காங்கிரசுக்காரர்களை ஆளுநராக நியமித்தால், அவர்கள் எடுக்கும் முடிவுகள் கட்சிச் சார்புடைய முடிவுகளாக அமைந்துவிடுவதில் ஆச்சரியமில்லை.

ஒரே கொள்கையுடன் காங்கிரசு இயங்குகிறதா?

கூட்டணிபற்றி காங்கிரசுக் கட்சியினர் மிக அலட்சியமாகப் பேசினர்கள்; 'உதிரிகள்; வெவ்வேறு போக்குடையவர்கள்; மாறுபட்ட கொள்கையுடையவர்கள்' என்றெல்லாம் கூறப்பட்டது.

நான் அவர்களைக் கேட்கிறேன்— காங்கிரசுக் கட்சி ஒரே கொள்கையுடன் இயங்குகிறதா? எந்தப் பிரச்சினையிலும் ஒரேவிதப் போக்கில் கருத்துத் தரப்படுகிறதா?

காங்கிரசுக் கட்சியில், கம்யூனிஸ்டுக் கொள்கையுடையவர்கள் இருக்கிருர்கள்; சனசங்கக் கொள்கையுடவர்கள் இருக்கிருர்கள்; சுதந்தாக் கொள்கையுடையவர்கள் இருக்கிருர்கள்...

பிலு மோடி (சுதந்.):— "எந்தக் கொள்கையுமே இல்லாதவர்களும் இருக்கிருர்கள்."

இரா. செழியன்:— "மற்றும், காங்கிரசில், மைசூர் காங்கிரசு கூறுவதை மராத்தி காங்கிரசு எதிர்ச்கிறது! பஞ்சாப் காங்கிரசை அரியாணு காங்கிரசு பலமாக எதிர்க்கிறது! அசாம் காங்கிரசுக்கும்—வங்காளக் காங்கிரசுக்கும் பெரிய மோதல் இருக்கிறது.

தாறுமாருகப் பேசுவதில் அர்த்தம் என்ன இருக்கிறது?

மாநிலத்துக்கு மாநிலம் போட்டியிருககிறது அது மட்டுமல்ல; ஒரு மாநிலத்துக்குள்ளேயே எவ்வளவு போட்டி —வெட்டு— குத்து!

வங்காளக் காங்கிரசில் அதுல்யா கோஷ் காங்கிரசு—கோஷ் காங்கிரசு!

உத்தரப் பிரதேசத்தில் குப்தா காங்கிரசு—திரிபாதி காங்கிரசு—என இரண்டு!

பிலு மோடி (சுதந்தரா): "—இரண்டு அல்ல- ஐந்து காங்கிரசுக் கட்சிகள் அங்கே இருக்கின்றன."

இரா. செழியன்:—"ஒவ்வொரு கொள்கைக்கும்---ஒவ்வொரு மாநிலத்துக்கும் காங்கிரசுக் கட்சிக்குள் பிரிவு இருப்பது மட்டுமல்ல; பத்திரிகை ஊப் பார்த்தால், 'வாலிப துருக்கியர்'—வயோதிகத் துருக்கியர்'—என்றும் பிரிவுகள் வந்துள்ளன.

ஆக, காங்கிரசுக்காரர்கள் பார்த்து, மற்றக் கட்சிகளின் கூட்டணியைத் தாறுமாருகப் பேசுவதில் அர்த்தமில்லை! இந்த வேறுபாடுகள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டவை!

திரு. வெங்கட சுப்பையா:— "'கருணுநிதி தி. மு. க.' என்றும், (உங்கள் அண்ணன்) 'நெடுஞ்செழியன் தி. மு க.' என்றும வந்துகொண்டிருக்கிறதே!"

இரா. செழியன்:—"அவ்வாறு எதுவும் வேறுபாடு அவர்களிடத்தில் இல்லை; 'வரவேண்டும்' என்ற விருப்பத்தில் வேண்டுமானுல், வெங்கட சுப்பையா போனறவர்கள் பேசலாம்; 'வந்துகொண்டிருக்கிறது' என்று அவர் பேசுவதிலிருந்தே இன்னும் வரவில்லை என்பதை அவரே ஒப்புக்கொள்கிருர்.

திரு. வெங்கட சுப்பையா ஆந்திராவிலிருந்து வருகிருர்; அங்கு இரண்டு -- மூன்று பிரிவுகள் காங்கிரசுச்குள் இருக்கின்றன; 'வெங்கட சுப்பையா எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்' என்பது எனக்குத் தெரியாது.

பரிசீலனை செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது!

அரசியல் சட்டத்தில், கவர்னருக்குத் தரப்பட்ட அதிகாரங்கள் மட்டுமல்ல; மற்றும் பல பகுதிகள் — குறிப்பாக மத்திய -- மாநில அரசுகளுக்கு இடையில் உள்ள அதிகாரப் பிரிவுகள் பற்றி மீண்டும் நாம் பரிசீலனை செய்யவேண்டும்.

அரசியல் சட்டத்தின் பல பகுதிகளை மறு பரிசீலனை செய்தாக வேண்டிய காலம் வந்துவிட்டது.

முன்னுள் தலைமை நீதிபதியாகவும், இங்கு சிலகாலம் முக்கிய அமைச்சர்களில் ஒருவராகவும் இருந்த வி. சி. சக்ளா அவர்கள்கூட, 'அரசியல் சட்டம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்' என்று பேசியுள்ளார்.

அரசியல் சட்ட மறுபரிசீலனை தேவையான ஒன்று—அவசரமான ஒன்றுகூட!

வேதனையை நீக்க முற்படவேண்டும்

பீகாரில் நடைபெற்ற வேலை நிறுத்தம் பற்றியும், தடியடிப் பிரயோகம் பற்றியும் பலர் குறிப்பிட்டார்கள்; இன்று காலை பதிலளித்த உள்துறை அமைச்சர் வி. சி. சக்ளா, 'தடியடிப் பிரயோகம் நடைபெறவே இல்லை' என்று சாதித்தார்.

சற்றுமுன் இந்த விவாதத்தில் பேசிய டீ. என். திவாரி அவர்கள் — பீகார் மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினர்— பீகார் மாநிலக் காங்கிரசுத் தலைமைக்குப் போட்டியிட்டுத் தோல்வியுடன் திரும்பியுள்ளவர் — 'வேலைநிறுத்தம் செய்தவர்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்யவேண்டிய அவசியம் எப்படி வந்தது?' என்பதற்கான காரணங்களைத் தந்துள்ளார்.

'தடியடி நடைபெறவே இல்லை' என்கிருர் அமைச்சர்; தடியடி நடைபெற்றதற்குத் தகுந்த காரணமிருப்பதாக திவாரிஅவர்கள் கூறுகிருர். இதில் எது சரி? தடியடி நடைபெற்றதா இல்லையா என்பதை முதலில் முடிவு செய்தாக வேண்டும்.

பீகார் இப்போது குடியரசுத் தலைவர் ஆட்சியின்கீழ் இருப்பதால், அந்த மாநிலப் பிரச்சினைகளை நாடாளுமன்றம்தான் கவனிக்க வேண்டிய பொறுப்பில் இருக்கிறது.

ஆக பீகாரில் நடைபெற்ற தடியடி பற்றி நன்கு விசாரணை செய்ய வேண்டும்.

வேலைநிறுத்தம் நடைபெறுவதற்கான காரணங்களைத் தெரிந்து, வேதனையை நீக்க நாம் முற்பட வேண்டும்."

காங்கிரசுத் தலைவரா--- அரசாங்கத் தூதுவரா?

நிஜலிங்கப்பாவுக்குச் 'சிறப்புப் பாஸ்போர்ட்' வழங்கியதேன்?

நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியினர் கேள்விகள்

புதுடில்லி, ஆக 1— காங்கிரசுக் கட்சியின் தலைவராக உள்ள திரு. நிஜலிங்கப்பா ஜப்பான் செல்வதற்கு, ஓர் அரசாங்கத்தூதுவர்க்குரிய பாஸ்போர்ட் வழங்கப்பட்டது சம்பந்தமாக நாடாளுமன்ற மேலவையில் கேள்விகள் எழுப்பப்பட்டன.

இதற்கு, வெளிநாட்டு உறவுத் துறைத் துணையமைச்சர் பி ஆர். பகத் பதிலளிக்கையில், 'அரசியல் முக்கியத்துவமுடையவர்கட்கோ, குழுக்களுக்கோ சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி இம்மாதிரி அனுமதி வழங்க அரசுக்கு அதிகாரம் உண்டு' எனக் கூறினுர்.

'நிஜலிங்கப்பா தொழில் நிறுவனங்களுடன் தனிப்பட்டமுறையில்பேச்சுவார்த்தைநடத்த செல்லவில்லை என்றும், ஜப்பானிலிருந்து வந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளுவதா வேண்டாமா என்பது குறித்து வெளியுறவுத் துறையின் ஆலோசனை கேட்கப்பட்டதாகவும், வெளியுறவுத் துறை, 'நாட்டு நன்மையைக் கருதி, அழைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று கூறியதாகவும் சொன்னுர்.

'நியாயமான முறையில்தான் இப்படிச் சிறப்பு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா என்பதே கேள்வியாகும்; நிஜலிங்கப்பாவுக்கு இப்படிச் சிறப்பு அனுமதி வழங்கப்பட்டிருக்குமானுல், எல்லா அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் இதுபோன்று சிறப்பு அனுமதி வழங்க முன்வர வேண்டும்' என்று கம்யூனிஸ்டுக் தலைவர் பூபேஷ் குப்தா வற்புறுத்தினுர்.

‘இனி எந்தச் சக்தியாலும் தமிழை அழிக்க இயலாது’

இலண்டன் நகரில் அமைச்சர் முத்துசாமி பேச்சு

தமிழ்ச் சங்க வரவேற்பில் சென்னை மாநகராட்சிக் குழுவினர்

இலண்டன், ஆக. 1—

“இலண்டன் மாநகரில் தமிழ் உணர்ச்சியைக் காணும் போது பெருமையாக இருக்கிறது. இப்படிப்பட்ட தீவிர உணர்ச்சி கொண்டவர்கள் இருக்கும்வரையில், தமிழை எந்தச் சக்தியாலும் அழிக்க முடியாது !

‘இங்கு பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்துள்ள தமிழர்களைக் காண்கிறேன். யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்பது தமிழனின் குறிக்கோள். மலேசியாவிலிருந்து -- இலங்கையிலிருந்து -- தமிழகத்திலிருந்து -- இந்தியாவின் பிற மாநிலங்களுலிருந்து -- பல்வேறு பகுதிகளிலிருந்து வந்தவர்களையெல்லாம், தமிழ் அன்பு -- தமிழ்ப் பற்று -- ‘தமிழ்க் குடிமகன்’ என்ற உணர்வு -- தமிழகத்தினுடைய பற்று -- ஒன்று சேர்ந்துள்ளது”

என்று, தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள், இங்கு நடைபெற்ற வரவேற்பு ஒன்றில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் புகழ்ந்துரைத்தார்.

இரஷ்யா செல்லும் வழியில் இலண்டனுக்குச் சென்ற அமைச்சர் முத்துசாமி தலைமையில் வந்துள்ள தூதுக் குழுவுக்கு இலண்டன் தமிழ்ச் சங்கம் இன்று உற்சாகமான வரவேற்பு அளித்தது.

வரவேற்புக்கு இலண்டன் மாநகரிலும் அதற்கு அருகிலும் வசிக்கும் தமிழர்களும், இந்தியாவின் பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் வந்திருந்தனர்.

இலண்டன் தமிழ்ச் சங்கத் தலைவர் மெய்யப்பன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

சென்னை மாநகராட்சி மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் ஆங்கிலத்தில் பேசி வரவேற்புக்கு நன்றி தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சி முஸ்லீம் லீக உறுப்பினர் சிலார் மியான் பேசுகையில், ‘இலண்டன் மாநகரில் வாழும் தமிழர்களிடையே நிலவுகிற ஒற்றுமையும், சகோதர பாசமும் பாராட்டத்தக்கது’ என்று கூறினார்.

சென்னை மாநகராட்சி ஆணையாளர் அப்பாசங்கர், தமிழின் சீரிளமைத் திறம் குறித்து உரையாற்றினார்.

முன்னாள் மேயரும், சென்னை மாநகராட்சி தி. மு. க. குழுத் தலைவருமான வி. முனுசாமி பேசுகையில், “இங்கு இத்தனைத் தமிழர்கள் குடியிருப்பதைக் கண்டால், ‘இது இலண்டனா? தமிழ்நாடா?’ என்ற சந்தேகமே வந்துவிட்டது” என்று கூறிப் பாராட்டினார்.

மாநகராட்சி உறுப்பினர் ஜி. உபாபதியும் பேசினார்.

பின்னர், தூதுக் குழுத் தலைவர் அமைச்சர் முத்துசாமி, தமிழ் மொழி—தமிழ் இனம்—தமிழ் நாடு ஆகியவற்றின் சிறப்புக்களை எடுத்துக் கூறினார்.

அன்பளிப்பு

அமைச்சர் முத்துசாமி அவர்கள், உலகத் தமிழ் மாநாட்டு சிறப்பு மலர் — அமைச்சர் மு. கருணாநிதி எழுதிய சிலப்பதிகாரம் —மற்றும் தமிழ் இலக்கியம் பற்றிய சிறந்த தமிழ்—ஆங்கில நூல்களை, இலண்டன் தமிழ்ச் சங்கத்துக்கு வழங்கினார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கைச்சாத்திட்ட புகைப்படத்தையும் தமிழ்ச் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கினார்.

இலண்டன் மேயர் வரவேற்பு

குழுவினரை, சூலை 31-ம் நாளன்று இலண்டன் நகர மேயர் வரவேற்று, மாநகராட்சி நிர்வாக வளர்ச்சி பற்றி உரையாடினார்.

ஆக. 1-ம் நாளன்று குழுவினர், இலண்டன் கவுன்சிலுக்குச்சென்று நகர வளர்ச்சிக் கவுன்சிலின் பணி பற்றி விவாதித்தனர்.

ஆக. 2-ம் நாளன்று குழுவினர் இலண்டனைவிட்டுப் புறப்பட்டனர்.

பாகிஸ்தானின் பரிசைப் பெற்ற இந்திய அமைச்சர் !

நாடாளுமன்றத்தில் கண்டனக் குரல்

புதுடில்லி, ஆக. 3—

பாகிஸ்தான் அரசு அளித்த சிறப்புப் பரிசு ஒன்றை முன்னாள் மத்திய வீட்டு வசதித் துறை அமைச்சர் மேகர் சந்த் கன்னா ஏற்றுக்கொண்டிருப்பதை நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்கள் பலர் கண்டித்துக் குரல் எழுப்பினர்.

“எல்லைக் காந்தி அப்துல் கபார் கானை பாகிஸ்தானுக்குப் பலியிட்டதற்காக இப்பரிசு வழங்கப்பட்டிருக்கிறது”

என, ச. சோ. கட்சி உறுப்பினர் இராஜ் நாராயண் குற்றஞ்சாட்டினார்.

வெளிநாட்டு உறவுத் துறை அமைச்சர் பகத் பதிலளிக்கையில், 1956-ம் ஆண்டு மார்ச் 23-ல் பாகிஸ்தான் குடியரசானதை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டதற்கு அடையாளமாகவே இந்த நினைவுச் சின்னம் வழங்கப்பட்டிருப்பதாகவும், வேறு எந்தத் தனிப்பட்ட சேவைக்காகவும் அது வழங்கப்படவில்லை என்றும் கூறினார்.

“இந்தியக் குடிமகன் வெளிநாட்டு நினைவுச் சின்னங்களைப் பெறுவது சட்டவிரோதமானதல்ல; ஆனால், அவற்றைப் பொது இடங்களில் அணிவதோ, பயன்படுத்துவதோ கூடாது” என்றும் அவர் கூறினார். மேலும் அவர் விளக்கியதாவது :—

“வெளிநாட்டுப் பட்டங்களையோ, சௌரவப் பட்டங்களையோ பெறுவது அரசியல் சட்டம் தடை செய்திருக்கிறது.

“திரு. கன்னா, பாகிஸ்தான் நினைவுச் சின்னத்தைப் பெற்றுக் கொள்ளுவது குறித்து அரசுக்கு அறிவிக்கவில்லை; அவர் அதை அரசுக்கு அறிவித்திருந்தாரானால் நன்றாக இருந்திருக்கும்.”

“முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் வி. கே. கிருஷ்ண மேனன்கூட இப்படிப்பட்ட பரிசுகளைப் பெற்றிருக்கிறார்” என்று சி. டி. பாண்டே கூறினார்.

மோகன்தாரியா பேசுகையில், பாகிஸ்தான் குடியரசு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போது திரு. கன்னா பதவியில் இருந்திருக்கிறார் என்றும், அரசியல் சட்டப்படி குடியரசுத் தலைவரின் அனுமதியின்றி அவர் வெளிநாடுகளிடம் பரிசோ, பயனோ பெற்றிருக்கக்கூடாதென்றும் குறிப்பிட்டார்.

மீன்பிடித் துறைமுகத் திட்டத்துக்கு ரூ. 3.50 கோடி

டீசல் எஞ்சின் --- பால் பவுடர் தொழிற்சாலைகளும் அமையும்

நவீன முறையில் ஆடு அறுக்கும் நிலையம் --- ரூ. 1 கோடி மூலதனத்தில் எருமைப் பண்ணை

வேளாண்மை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி வெளியிட்ட தகவல்

சென்னை, ஆக. 3—

“சென்னை இராயபுரத்திலும், தூத்துக்குடியிலும் மீன் பிடித் துறைமுகங்கள் கட்டுவதற்கான திட்டத்தைத் துரிதப்படுத்துவதாக மத்திய உணவு அமைச்சர் தெரிவித்திருக்கிறார்”

என்று டெல்லி சென்று திரும்பிய வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி தெரிவித்தார், அவர் மேலும் கூறியதாவது :—

“தூத்துக்குடி, இராயபுரம் மீன்பிடித் துறைமுகத் திட்டங்களுக்கு மூன்றரைக் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சென்னைக்கு அருகிலுள்ள எண்ணூரில் கப்பல்களுக்கான டீசல் எஞ்சின் உற்பத்தித் தொழிற்சாலை அமைப்பதையும் மத்திய அரசு பரிசீலிக்கும்; ஜப்பான் கம்பெனியின் கூட்டுறவுடன் இந்தத் தொழிற்சாலை அமைக்கப்படும்.

இவ்வாண்டு தமிழகத்தில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கப்படும், இதற்கும் மத்திய அரசு ஒப்புதலளித்துவிட்டது. பம்பாய் ஆரே பால் பண்ணையிலுள்ள நவீன பால் பவுடர் கம்பெனியைப் போல இந்தத் தொழிற்சாலை இருக்கும்.

பால் பவுடர் தொழிற்சாலையைத் தமிழகத்தில் அமைப்பதைத் தமிழக அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டாலும், மத்திய அரசு தரும் மானியத்தைப் பொறுத்தே இத்திட்டத்தை ஏற்பதா இல்லையா என்பதை முடிவு செய்வோம்.

தமிழகத்தில் நாற்பது இலட்சம் எருமைகள் இருக்கின்றன; ஆனால் வடஇந்திய எருமைகள்தான் அதிகமாகப் பால் தருகின்றன. தமிழகத்திலும் அதிகப் பால் கொடுக்கக்கூடிய எருமைகளை வளர்க்க வேண்டும்.

சென்னையை அடுத்த செங்குன்றம் பகுதிகளில் ஆயிரத்து நூறு ஏச்கர் பரப்பளவில் ‘முர்ரா’ எனப்படும் டெல்லி எருமைப் பண்ணை ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில் அமைக்கப்படும். இதேபோல் ஆந்திரம், மைசூர், கேரளம் ஆகிய மாநிலங்களிலும் மத்திய அரசு எருமைப் பண்ணைகள் அமைக்கும்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து நல்ல பொலி காளைகள் வாங்க உதவ வேண்டுமென்று மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம்.

அதிக முட்டையிடும் கோழிகள் இனத்தைப் பெருக்கப் பெரிய கோழிப் பண்ணை வைத்துத் தர வேண்டும் என்றும் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளோம்.

சென்னை நகரில் ஆடுகள் அறுக்க நவீன நிலையம் நிறுவப்படும். இந்த நிலையத்தை அமைக்கப் பாதிச் செலவை சென்னை மாநகராட்சியும், பாதிச் செலவை மத்திய அரசும் ஏற்றுக்கொள்ளும்.”

தமிழகத்தில் ‘ராக்கெட்’ தளம்

மரக்காணம் அருகில் அமைவதற்கு வாய்ப்பு

அமைச்சர் நெடுஞ்செழியனும் அணுசக்திகமிஷன் தலைவரும் பார்வையிட்டனர்

சென்னை, ஆக. 2—

தமிழகத்தில் ‘ராக்கெட்’ தளம் அமைப்பதற்காகச் சிபாரிசு செய்யப்பட்ட இடத்தைத் தமிழகக் கல்வி—தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியனும், அணுசக்தி கமிஷன் தலைவர் விக்ரம் சாராபாயும் விமானம் மூலம் இரண்டு மணி நேரம் சுற்றிப் பார்த்தனர்.

மேற்குக் கரையில் கேரளத்தில் தும்பா என்ற இடத்தில் ஏற்கனவே ஒரு ராக்கெட் தளம் இருக்கிறது; கிழக்குக் கடற்கரையில் இதேபோல ஒரு தளம் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கான இடம் பூமத்திய ரேகைக்கு மிக அருகில் இருக்க வேண்டும்; இதற்கென்று ஏற்கனவே தமிழகத்தில் இரண்டு-- மூன்று இடங்கள் பார்க்கப்பட்டுள்ளன.

இன்று செங்கற்பட்டு மாவட்டம் பாலாற்றின் தென்கரையில் கடற்கரையை ஒட்டியுள்ள ‘தென் பட்டினம்’ என்ற தீவைப் பார்வையிட்டனர்; இது, மரக்காணம்—செய்யூர் ஆகிய இடங்களுக்கு இடையில் உள்ளது. இந்தத் தீவு பத்தாயிரம் ஏக்கர் பரப்புள்ளதாகும்.

ஆந்திரத்தில் நெல்லூர் மாவட்டம் தென் பகுதியில் தமிழக எல்லையை ஒட்டி இருக்கிற ‘ஸ்ரீஹரி கோட்டா’ என்ற இடத்தையும் பார்வையிட்டனர்.

இப்போது அமையவிருக்கும் ராக்கெட் தளத்தைச் சுற்றிலும் கிராமங்கள், வீடுகள் எதுவும் இருக்கக்கூடாது என்பதால், தீவாக உள்ள இடம் தேடப்படுகிறது.

“பார்வையிட்ட இவ்விரு இடங்களில் ஏதாவது ஒன்று விரைவில் முடிவு செய்யப்படும்” என்று செய்தியாளர்களிடையே அமைச்சர் தெரிவித்தார்.

பொறுப்பிலிருந்து நழுவும் வாய்ப்பைத் தேடி அலையமாட்டோம் !

திறனைக் குறைத்து மதிப்பிடக் கூடாதென வேண்டுகோள்

புதுடில்லி, சூலை 31—

“50,000 அடி முதல் 60,000 அடி உயரத்தில் பறக்கும் விமானங்களை உடனுக்குடன் கண்டுபிடித்து தகவல் தரும் ராடார் சாதன அமைப்பு இந்தியாவிடம் இருக்கிறது; அவ்விமானங்களைக் கீழே இறக்குவதற்கான சாதனங்களும உள்ளன; தகவல் கிடைத்த இரண்டு நிமிடத்திற்குள் 15,000 அடி உயரத்துக்கும் இந்திய விமானங்கள் செல்ல முடியும்”

என்று நாடாளுமன்ற மேலவையில், பாதுகாப்புத் துறை அமைச்சர் சுவரண் சிங் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :-

“தரை--ஆகாயம் -- கடற்பகுதி ஆகியவற்றில் ஏற்படக்கூடிய எந்த நிலைமையையும் சமாளிக்க முழு அளவில் நாம் தயாராக இருக்கிறோம்; இந்தியாவின் திறனைக் குறைத்து மதிப்பிட வேண்டாம்; பாகிஸ்தானின் திறனையும் அதிகமாகவோ அல்லது குறைத்தோ மதிப்பிடவேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

“தாஷ்கண்ட் பிரகடனத்தைப் பின்பற்றுவதென இந்தியா உறுதி கொண்டிருக்கிறது; நம்முடைய பொறுப்பிலிருந்து நழுவுவதற்கான வாய்ப்புக்களைத் தேடி அலையமாட்டோம்.”

தங்களுக்கு ஒதுக்கிய வீடுகளை வாடகைக்கு விடுகின்றனர்

நாடாளுமன்ற உறுப்பினர்கள்மீது 1167 புகார்

புதுடில்லி, ஆக. 3—

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது சம்பந்தமாக நாடாளுமன்ற மேலவையில் புகார் தெரிவித்ததையடுத்து, எம். பி.-க்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகள் பற்றிய முழுப்பட்டியலையும் அவையில் தாக்கல் செய்யும்படி துணை அவைத் தலைவர் வயலெட் ஆல்வா, வீட்டு வசதி அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

எம்.பி.-க்களுக்கான வீடுகள் ஒதுக்கீட்டுக்கு வெளியே 72 பெரிய பங்களாக்களை அமைச்சர் எம்.பி.-க்களுக்கு ஒதுக்கியுள்ளதாக கம்யூனிஸ்டு உறுப்பினர் பூபேஷ்குப்தா தெரிவித்தார்; அந்த உறுப்பினர்களுக்குப் பெரிய பங்களாக்களைப் பெறும் உரிமை கிடையாது’ என்றார்.

“நான் அந்த வீடுகளை ஒதுக்கவே இல்லை” என்று அமைச்சர் ஜகந்நாத ராவ் சொன்னார்; ‘பெரிய பங்களாக்கள் ஒதுக்கப்பட்டிருந்தால் நாடாளுமன்ற விவகார அமைச்சர் சிபாரிசின்படி ஒதுக்கப்பட்டிருக்கலாம்’ என்றார்.

அரசாங்க வீடு பெற்றவர்கள் அவ்வீடுகளில் சில அறைகளை அதிகத் தொகைக்கு வாடகைக்கு விடுவதாகப் பலர் கூறினர்.

அவ்வாறு வாடகைக்கு விடுவதாக 1967-ல் 1,167 புகார்கள் கிடைத்தன என்றும், 479-பேர் கண்டுபிடிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டதாகவும், இவ்வாண்டு 563 புகார்கள் கிடைத்தன என்றும், 210-பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் 200 புகார்கள் விசாரிக்கப்பட்டுவருவதாகவும் துணையமைச்சர் கூறினார்.

“பெரும் அளவு நாடாளுமன்ற உறுப்பினர்களே தாங்கள் வசிக்கும் அரசாங்க வீடுகளின் இடங்களை வாடகைக்கு விடுகின்றனர்; ஆகவே, அரசு ஊழியர்களைக் குறை சொல்வதில் அர்த்தமில்லை” என்று திருமதி யசோதா ரெட்டி கூறினார்.

பொதுமக்கள் குறைகளை நீக்க உடனடி நடவடிக்கை

முதலமைச்சர் அண்ணா உருவாக்கிவரும் புதிய திட்டம்

மதுராந்தகம், ஆக. 3—

“பொதுமக்களின் குறைகளை உடனடியாகத் தீர்க்கும் பொருட்டு ஒரு புதிய திட்டத்தை முதலமைச்சர் அண்ணா அவர்கள் உருவாக்கிவருகிறார்கள்; அந்தப் புதிய திட்டம் முதன்முதலாக செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆகஸ்டு இரண்டாவது வாரத்தில் கொண்டுவரப்படும்”

என்று செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் கே. இலட்சுமிகாந்தன் பாரதி, விழா ஒன்றில் தெரிவித்தார்.

திருக்கழுக்குன்றம் அடுத்த நெய்ருட்டி கிராமத்தில், மாவட்டக் கலெக்டர், 180 நிலமற்ற விவசாயிகளுக்கு நிலப் பட்டாக்களை வழங்கினார்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் முடிவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், இதற்கான விரிவான திட்டம் ஒன்றை முதலமைச்சர் அண்ணா அவர்கள் கொண்டுவர இருக்கிறார் என்றும், இதன்மூலம் பொதுமக்கள் குறைகளை அதிகாரிகளுடன் கலந்து பேசி முடித்துக்கொள்ள வேண்டுமென்றும் கலெக்டர் கேட்டுக்கொண்டார்.

வெள்ளிக்கும் கட்டுப்பாடு?

பம்பாய், ஆக 3—

வெள்ளிக்கும் கட்டுப்பாடு வரக் கூடுமெனக் கருதப்படுகிறது.

வெள்ளிக் கடத்தலைத் தடுப்பதற்கு மத்திய அரசு தகுந்த நடவடிக்கைகளை உருவாக்கி வருவதாகச் சொல்லப்படுகிறது.

இலங்கைத் தமிழர்கட்கு மறு வாழ்வளிப்பு

சென்னை, ஜூலை 31—

"இலங்கையிலிருந்து திரும்பும் இந்திய மரபினர் தங்குவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்காக மத்திய அரசு ரூ. 37 இலட்சத்துக்கு மானிய உதவி அளித்துள்ளது" என்று அமைச்சர் திரு. கருணாநிதி நிருபர்களிடம் தெரிவித்தார்.

இத்தொகையில் ரூ. 17 இலட்சம் தனுஷ்கோடி ரேவுத் துறையைச் செப்பனிடுவதற்காகச் செலவிடப்படும்; இந்த ரேவுத் துறை, 1965-ல் வீசிய புயலில் சேதமடைந்தது.

"இதைத் தவிர, இலங்கையிலிருந்து திரும்புவோரை வரவேற்று அவர்கள் தங்குவதற்கு வசதி செய்வதற்காக தனுஷ்கோடியில் கட்டிடங்களைச் செப்பனிடவும், தண்ணீர்-மின்சார வசதிகளைச் செய்து தரவும் ரூ. 20 இலட்சத்துக்கான செலவு மதிப்பீட்டை தமிழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. இது, மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

1965-ல், இந்தியாவுக்கும்-இலங்கைக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, இலங்கையிலிருந்து 15 ஆண்டுகளில் 5.5 இலட்சம் இந்திய மரபினர் இந்தியாவுக்கு திருப்பியனுப்பப்படுவர்; இவர்களில் முதல் குழு இவ்வாண்டு பிற்பகுதியில் இந்தியா வந்துசேரும். இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களாக இருப்பர்.

போலீசுக்காரர்களின் பொறுமை சோதிக்கப்பட்டது

வேறு வழியின்றியே தடியடிப் பிரயோகம் செய்தனர்

காங்கிரசு ஊர்வலத்தின்போது நடந்ததென்ன--காவல்துறை அதிகாரி விளக்கம்

சென்னை, ஆக. 2—

"காங்கிரசார் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம், முதலில் மவுண்ட் ரோடு வழியாக வந்து பிறகு புதுப்பேட்டை வழியாக எழும்பூர் வந்தது; அதுவரையில் எந்தவிதமான தகராறும் ஏற்படவில்லை; எழும்பூர் இரயில் நிலையம் அருகில் ஊர்வலம் வந்தபோது, ஊர்வலத்திலிருந்து ஏறத்தாழ 70—80 பேர் கலைந்து சென்று குறுக்கு வழியில் சென்றனர்.

"பிறகு ஊர்வலம், காந்தி—இர்வின் சாலை வழியாக வந்து பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் 'சர்ச்' அருகில் வந்தபோது, மேற்கு பக்கமாகத் திரும்ப முயன்றது; அந்த வழியாகச் செல்வதற்கு அவர்கள் அனுமதி பெறவில்லை; மேலும், ஊர்வலம் செல்வதாக அவர்களே அறிவித்திருந்த பாதை வேறு ஆகும்.

"**அவர்களுடைய குறி மேற்குப் பக்கமே இருந்ததால், அந்த வழியாகச் செல்வதற்கு அவர்கள் முயன்றனர்; அதைத் தடுத்த போலீசார்மீது கல்லையும், செருப்பையும் எறிந்தார்கள்; அப்போதும் போலீசார், அவர்களைத் திரும்பிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்கள்; ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கேட்காமல், அருகில் நின்றுகொண்டிருந்த உதவிக் கமிஷனர்களான அரங்கசாமி, கிருஷ்ணன் ஆகியோரின் கார்களைத் தாக்கினர்; எனினும் அவர்கள் பொறுமையுடன், 'கலைந்து செல்லுங்கள்' என ஊர்வலத்தினரைக் கேட்டுக்கொண்டனர். அக்கோரிக்கையையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீறிச் சென்று, மோட்டார் சைக்கிளுக்குத் தீ மூட்டினர்.**

"**ஆர்ப்பாட்டக்காரர்கள், போலீசாரைக் கொடிக் கம்புகளாலும், கற்களாலும் தாக்கினர். நிலைமை கட்டுக்கடங்காது போகவே, உரிய எச்சரிக்கை விடுத்த பின்னர், போலீசார், தடியடிப் பிரயோகம் செய்தனர்; எனவே, 'அவர்களுக்கு அறிவிப்புத் தரப்படவில்லை' என்பது சரியல்ல!**

"கண்ணீர்ப்புகையைப் பொறுத்தவரையில், அதைப் பயன்படுத்துவதற்குச் சில விதிமுறைகள் உள்ளன; தொலைவில் உள்ள கூட்டத்தைக் கலைப்பதற்குத்தான் கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்படும்; ஏனெனில், கண்ணீர்ப்புகைக் குண்டு துப்பாக்கியால் சுடப்படுவதாகும்; எனவே, அருகில் நிற்பவர்கள்மீது அதைச் சுடமுடியாது; மேலும், காற்று சாதகமாக இருந்தால்தான் கண்ணீர்ப்புகைக் குண்டை சுடமுடியும்.

"அன்றியும், தங்களுக்கும்—ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே தொலைவு அதிகமில்லாததாலும், நெருங்கி இருந்ததாலும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை போலீசாரால் வெடிக்க முடியவில்லை. கூட்டத்தை விரைவில் கலைக்கும் வழியைப் போலீசார் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

"கூட்டத்தைக் கலைப்பதற்கு எந்த முறை சிறந்தது என்று போலீசார் கருதுகிறார்களோ, அந்த முறையைத்தான் அவர்கள் முதலில் பயன்படுத்துவார்கள்; அதன்படி, போலீசாரைத் தாக்கியவர்களைக் கலைக்க அந்தச் சூழ்நிலையில், 'தடியடி நடத்துவதுதான் சிறந்த முறை' எனக் கருதி தடியடி நடத்தப்பட்டது"

இவ்வாறு போலீசுக் கமிஷனர் திரு. பி. குப்புசாமி அவர்கள், செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் விளக்கினர். மேலும் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"ரிசர்வ் போலீசு இன்ஸ்பெக்டருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் ஒன்று, முற்றிலும் எரிக்கப்பட்டுவிட்டது; அது புதிய மோட்டார் சைக்கிள்; அதன் மதிப்பு ரூ. 3,000 இருக்கும்.

போலீசு 'வாகன்' ஒன்றின் கண்ணாடி உடைக்கப்பட்டது; அதில் பல பக்கங்களும் சேதப்படுத்தப்பட்டு இருந்தன; அந்த வாகனுக்கு மட்டும் ரூ. 2,500 சேதம் இருக்கும்.

ஒரு போலீசு அதிகாரியே மோட்டார் சைக்கிளுக்குத் தீ வைத்ததாக ஒரு பத்திரிகையில் செய்தி வந்திருப்பது, கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாத--அபாண்டமான குற்றச்சாட்டாகும். எந்தப் போலீசாரும் தங்கள் வாகனத்தையோ, பொதுச் சொத்தையோ சேதம் செய்வார்கள் என்பது நடக்காத காரியம்.

அந்த மோட்டார் சைக்கிளுக்குத் தீ வைத்தவர்கள், 'கட்டுக்கு அடங்காமல் ஆர்ப்பாட்டம் செய்த ஊர்வலத்தின ஒரு பகுதியினர்தான்' என்பது நிச்சயமான உண்மை.

இரண்டு—மூன்று முறை தடியடி நடந்ததாகக் கூறப்படுவது உண்மையன்று; ஒரே முறைதான் தடியடி நடந்தது. பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையும், காந்தி—இர்வின் சாலையும் சந்திக்கும் இடத்தில்தான் முதலில் தடியடி நடந்தது. அங்கிருந்து கலைந்து சென்ற கூட்டத்தினர், மூர்மார்க்கெட்டு வரையில் வன்முறையில் ஈடுபட்டதால், அவர்களைப் போலீசார் கலைக்க, மூர்மார்க்கெட்டுவரை சென்றார்கள்.

போலீசு லாரியில் கல்லும், சோடா புட்டியும் இருந்ததாகக் கூறப்படுவது அப்பட்டமான பொய்யாகும்.

கூட்டத்தைக் கலைக்கத் தடியடி நடத்தும்போது எந்தப் பாகத்தில் அடிபடுகிறது என்று கூற முடியாது; சிலருக்குத் தலையில் அடிபட்டு இருக்கலாம். ஏறத்தாழ 300 சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன; அவைகளை எப்போது திருப்பிக் கொடுப்பது என்று இன்னும் முடிவு செய்யவில்லை.

இந்தக் கலவரம் சம்பந்தமாக இதுவரையில் யாரும் கைது செய்யப்படவில்லை; இது குறித்து விசாரணை செய்துகொண்டு இருக்கிறோம்."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

5--8--68

சென்னை 2-வது வட்டம்

மக்கள் முன்னேற்ற மன்ற 11-வது ஆண்டுவிழா; மாலை 7 மணிக்கு; இராயபுரம் சேக் மேஸ்திரி தெருவில் (போலீசு நிலையம் அருகில்); தலைவர்: ஜே. மணி; பேசுவோர்: புலவர் பொன்னிவளவன், நடிகமணி டி.வி. நாராயணசாமி எம்.எல்.சி. கவிஞர் கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., எம். வேதாசலம் எம்.எல்.ஏ., இரா. சனார்த்தனம், கே. எம். கண்ணபிரான், பி. கே. மாரியப்மன், கே. சாரங்கபாணி, பி. பாண்டியன், வி. சுந்தரமூர்த்தி.

வீரபாண்டி ஆறுமுகத்துக்குக் கார் பரிசளிப்பு

வீரபாண்டித் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் தோழர் எஸ். ஆறுமுகத்துக்குக் கார் பரிசளிப்பு விழா, 4—8—68 மாலை 6-30 மணிக்கு வேம்படிதாளத்தில் நடைபெறும்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. க. இராசாராம் தலைமையில் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு கருணாநிதி காரினை வழங்குவார்.

மாவட்டச் செயலாளர் ஈ. ஆர். கிருட்டினன், நாடாளுமன்ற உறுப்பினர் செ. கந்தப்பன், துரை முருகன், முரசொலி செல்வம், ஏ. பி. அப்புசாமி, பி. வி. கணபதி, எஸ். ஏ. அன்புக்கரசு, மற்றும் சேலம் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சிறப்புரையாற்றுவர்.

'படித்தவர்களும் விவசாயத்தில் ஈடுபடும் நிலை ஏற்படுவது அவசியம்'

'அதிகாரிகளாக--ஆலோசனை கூறுபவர்களாக இயங்கும் நிலை மாறவேண்டும்'

கருத்தரங்கில் அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

தஞ்சை, ஆக 1—

"**தஞ்சை மாவட்டத்திலுள்ள முதல்தர வாய்க்கால்கள் சீரமைப்பும், வடிகால்கள் பிரச்சினைக்குத் தீர்வும் நான்காவது திட்டத்தில் இடம்பெறும்**"

என்று பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், தஞ்சை மாவட்ட வேளாண்மைக் கருத்தரங்கு மலரை வெளியிட்டுப்பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் விளக்கியதாவது:—

கடந்த ஆண்டு நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கிலும், நீர்வள-நிலவள மாநாட்டிலும் எடுக்கப்பட்ட முடிவுகளில் பெரும்பான்மையானவை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; எஞ்சியுள்ள முடிவுகள் நிறைவேற்றப்படும் நிலையில் உள்ளன.

இந்த மாநாட்டில் பேசியவர்கள் உரம் பற்றியும் கடன் பற்றியும் கவலைப்படாது பேசினார்கள்; அந்த அளவுக்கு உரமும் கடனும் ஏராளமாகவும், தாராளமாகவும் கிடைக்கின்றன.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு நான்கு நாட்கள் கழித்து மேட்டூர் அணை திறந்துவிடப்பட்டது; கடந்த ஆண்டு இம்மாதம் மூன்றும் நாள் அணை திறந்துவிடப்பட்டது; இந்த ஆண்டு ஏழாம் நாள் திறந்துவிடப்பட்டது.

இந்த ஆண்டு துவக்கத்தில் 28,000 கியூசெக்ஸ் தண்ணீர் திறந்துவிடப்பட்டது; அடுத்து, 30,000 கியூசெக்ஸ் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது.

எனினும், கடந்த கிழமை, காவிரியின் கடைமடைப் பகுதிகளில் நீர்ப் பற்றுக்குறை நிலவுகிறது என்ற முறையீடு வந்தது; அதையடுத்து தஞ்சை தலைமைப் பொறியாளரும், பிற அதிகாரிகளும், நானும் அந்தப் பகுதிகளுக்குச் சென்று குறைபாடுகளை நேரில் அறிந்து அதனைப் போக்குவதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்தோம்.

நாங்கள் சுற்றிப் பார்த்த கடைமடைப் பகுதிகள் தவிர மீதியுள்ள பகுதிகளில் தலைமைப் பொறியாளரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் நேரில் சென்று பார்வையிடுவர்; இங்கு நாங்கள் தந்த வாக்குறுதிகள, எந்த அளவில் நிறைவேற்றப்படுகிறது என்பதையும் கவனிப்பார்கள்.

தமிழக அரசு, கடந்த பதினைந்து தினங்களாக, விவசாயப் பெருங்குடி மக்களின் பெருமூச்சைப் போக்கத்தக்க அளவில சிறந்த முறையில் பணியாற்றிவருகிறது.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவது போல், விவசாயத்தில் மாடுகளின் உதவி குறைந்து இயந்திரங்களின் பணி அதிகரிக்க வேண்டும். இதை அரசியல் கருத்தாக எடுத்துக்கொள்ள வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்திற்கு மாட்டைப் பயன்படுத்துவதற்குப் பதில், மற்ற காரியங்களுக்கு அதனைப் பயன்படுத்த முன்வரவேண்டும்.

மரக்கலப்பைகளையும், தொத்தல் மாடுகளையும் பயனபடுத்துவதை விடுத்து, இரும்புக் கலப்பைகளைப் பயன்படுத்தும் காலம் வர வேண்டும்.

படிக்காதவர்கள் மட்டுமே விவசாயத்தில் ஈடுபடும் நிலை மாறி, படித்தவர்களும் இத்துறையில் ஈடுபாடு கொள்ளும நலலதோர் நிலை நாட்டில் ஏறபட வேண்டும்.

படித்தவர்கள் வெறும் அதிகாரிகளாகவும், ஆலோசனை கூறுபவர்களாகவும் இருக்கும் நிலை மாறி, நேரடியாக விவசாயத்தில் ஈடுபட வேண்டும்.

ஹேமவதி அணைத் திட்டம் பற்றி டெல்லியில் நானும் மைசூர் முதலமைச்சர் வீரேந்திர பட்டீலும் பேசவிருக்கிறோம். அந்தப் பேச்சுவார்த்தையால் தமிழக நலனுக்கு ஊனம் ஏற்படாது எனபதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தப் பேச்சுவார்த்தை, விட்டுக் கொடுக்கும தன்மையிலோ, தமிழ் நாட்டை--தஞ்சைத் தரணியை பாதிக்கும விதத்திலோ இருக்காது; அந்தப் பிரச்சினையை அவ்வளவு இலேசில நாங்கள் விட்டுவிடமாட்டோம்."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்' என்பது இரண்டாவது சிபாரிசாகும்"

என்று சட்டத்துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

"'திரும்ப அழைக்க வகை செய்ய வேண்டும்' என்று கம்யூனிஸ்டுக் கட்சி யோசனை தெரிவிக்கவில்லையா? காங்கிரசுக் கட்சியில்தான் அதிக எண்ணிக்கையில கட்சி மாறுகின்றனர்; கட்சி மாறுவோர் அதிக எண்ணிக்கையில் சேருவதும் காங்கிரசில தான்"

என்று, பூபேஷ் குப்தா குறிப்பிட்டுக் கேட்டார்.

"'திரும்பி அழைக்க வேண்டும்' என்ற உறுப்பினர் யோசனை வழக்கறிஞர்களின் துணைக் குழுவுக்குச் சிறந்ததாகத் தோன்றவில்லை" என்று அமைச்சர் கூறினர்.

மணிலா, ஆக. 1—

பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவில பலஆண்டுகளாகக் கண்டிராத நில நடுக்கம் ஏற்பட்டு பயங்கரமான சேதத்தை விளைவித்திருக்கிறது.

ஐந்து மாடிக் கட்டிடம் ஒன்று தரையில வீழ்த்தப்பட்டது. அதில உறங்கிக்கொண்டிருந்த 200-க்கு மேற்பட்டோர் மாண்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் மீட்கப்பட்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

திருச்சியில் நகைத் தொழிலாளர் மாநாடு

தமிழக நகைத் தொழிலாளர் மாநாடு 6-8-68 காலை 9-மணிக்கு, திருச்சி தேவர் மன்றத்தில் துவங்கும்.

திரு. எஸ். குழந்தைசாமி தலைமைவகிப்பார்; திரு. கே. இராமகிருஷ்ணன் எம்.எல்.சி. திறந்துவைப்பார்; வேலூர் எம். சுப்பிரமணியம் துவக்கவுரையாற்றுவார்; நாஞ்சில் நடராசன் வரவேற்புரையாற்றுவார்.

பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி., எஸ். எஸ் மாரிசாமி எம்.பி., பி ஜி. கருத்திருமன் எம்.எல்.ஏ., கே. ஏ. நம்பியார் எம்.பி., எம். எஸ். மணி எம்.எல்.ஏ., வி. சாமிநாதன் எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எம்.ஏ., அப்துல் வகாப் எம்.எல்.சி., ஜி பராங்குசம் எம்.எல்.சி., ஏ. எஸ். ஜி. லூர்துசாமி, எஸ். மாணிக்கம், கே. கணேசன், ம. முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.